# இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

# வெற்றிடம்

**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அரச வைத்தியசாலைகளுக்காக மருந்து மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை இறக்குமதி செய்யும் ஒரே அரச நிறுவனம் என்பதோடு, தனியார் துறைக்காக மருந்துகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முதன்மை நிறுவனமாகும்.**

**எமது நிறுவனம் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீழுள்ளவாறு தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## 1. நிலை பொறுப்பு அதிகாரி – அரச ஒசுசல (விற்பனை மற்றும் ஊக்குவிப்பு) (JM 1.1) தரம்

**தகைமைகள்**

(a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்ட மருந்தாளர் தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(b) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில்/ நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட அதற்கு இணையான பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்

மற்றும்

(c) கணினி அறிவு

மற்றும்

(d) அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் மருந்தாளராக குறைந்து 01 அண்டு பிந்தைய சேவை அனுபம்.

**சம்பள அளவு:** ரூபா 53,250/- 945/- x 10, 1,420/- x 18 – 88,260/- (தோராயமாக மாத ஊதியம் ரூபா 145,842/- அளவு அமையும்)

**வயது வரம்பு:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இந்த உயர் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு பெருந்தாது)

## 2. பெறுகை அதிகாரி (JM 1.1) II ஆவது தரம்

**தகைமைகள்**

(a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட இரசாயன விஞ்ஞான பாடம் உட்பட BSc சாதாரண பட்டம் ஒன்று அல்லது இரசாயன விஞ்ஞானம் தொடர்பில் BSc விசேட பட்டம் ஒன்று அல்லது அதற்கு இணையான தகைமையை பெற்றிருத்தல்.

மற்றும்

(b) கணினி அறிவு

மற்றும்

(c) அரச/ கூட்டுத்தாபனம்/ சபை/ சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் கேள்விமனு பெறுகைத் துறையில் குறைந்து ஓர் ஆண்டு பிந்தைய சேவை அனுபம்.

**சம்பள அளவு:** ரூபா 53,250/- 945/- x 10, 1,420/- x 18 – 88,260/- (தோராயமாக மாத ஊதியம் ரூபா 145,842/- அளவு அமையும்)

**வயது வரம்பு:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இந்த உயர் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது)

## 3. முறைமை பகுப்பாளர் (MA 2.1) III ஆவது தரம் - (AS 400 முறைமைக்காக)

I. **தகைமைகள்**

(a) க.பொ.த. (சா/தர) பரீட்சையில், இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முறைகளில் சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் மற்றொரு பாடம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

(b) எந்த ஒரு பாடப் பிரிவிலும் க.பொ.த. (உ./தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

**II. தொழில் தகைமை**

(a) i. தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் (NIBM) மூலம் வழங்கப்படும் கணினியை அடிப்படையாகக் கொண்ட தகவல் கட்டமைப்பு தொடர்பில் உயர் தேசிய டிப்ளோமா ஒன்றை பெற்றிருத்தல்

அல்லது

ii. தகவல் தொழில்நுட்பத் துறையில் NVQ 5 தரத்துக்கு குறையாத வேறு அதற்கு இணையான டிப்ளோமா கற்கை ஒன்று

மற்றும்

(b) அரச/ கூட்டுத்தாபன/ சபை/ சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் கணினி நிரலாக்கல் துறையில் குறைந்து 03 ஆண்டுகள் பிந்தைய சேவை அனுபம்.

**சம்பள அளவு:** ரூபா 37,890/- 375/- x 10, 440/- x 7, 620/- x 4, 825/- x 20 - 63,700/- (தோராயமாக மாத ஊதியம் ரூபா 115,914/- அளவு அமையும்)

**வயது வரம்பு:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இந்த உயர் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது)

## 4. முறைமை ஆதரவு உதவியாளர் (MA 2.1) III ஆவது தரம்

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பில் மென்பொருள் (Software) மற்றும் வன்பொருள் (Hardware) உள்ளடங்கும் வகையில் NVQ 5 தரத்திற்கு குறையாத சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்

**சம்பள அளவு:** ரூபா 37,890/- 375/- x 10, 440/- x 7, 620/- x 4, 825/- x 20 - 63,700/- (தோராயமாக மாத ஊதியம் ரூபா 115,914/- அளவு அமையும்)

**வயது வரம்பு:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இந்த உயர் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது)

**விண்ணப்பதாரர்கள்,**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்

ii. பதவியின் கடமைகளை முறையாகச் செய்வதற்கு தேவையான உடல் மற்றும் உளத்தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மாதாந்த வருகை ஊக்கக் கொடுப்பனவு, பெறப்படாத விடுப்புகளை பணமாக்கல், வருடாந்த மிகையூதியம், அங்கத்துவ நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் ஊழியருக்கு மற்றும் குடும்பத்தினருக்கு மருத்துவமனையில் நிறுத்தப்படும்போதும் மருத்துவ காப்புறுதி உட்பட கவர்ச்சிகரமான நன்மைகள் பல உரித்தாகும்.

விண்ணப்பதாரர்களினால் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பப் படிவத்தில் வயது, தகைமை, பயிற்சி, சேவை அனுபவம், தற்போதைய பதவி, சம்பளம் மற்றும் சம்பள அளவு, வகித்த முந்தைய பதவிகள் மற்றும் முந்தைய தொழில் வழங்குநர்களுக்கு இணைந்த மற்றும் விலகிய திகதிகள் ஆகிய விடயங்களை உள்ளடக்கி தேசிய அடையாள அட்டையின் பிரதி, உறுதி செய்யப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் அனுப்புதல் வேண்டும். குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவுடன் கருத்தில்கொள்ளவும்.

விண்ணப்பத்தை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். அரச/ அரச கூட்டுத்தாபன/ சட்டரீதியான சபையில் சேவையில் ஈடுபடும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை. குறித்த நிறுவன தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். அனைத்த விண்ணப்பங்களும் 2026.04.06 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள நிர்வாகம்) - பதில்**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
**"மெஹெவர பியச",**
**16ஆவது மாடி, இல. 41,**
**கிருள வீதி. நாராஹென்பிட்ட,**
**கொழும்பு 05.**
**தொலைபேசி இலக்கம் 0112 320 356 - 9**